**மார்ச் – 28**

# TNPSC துளிகள்

- தேசிய e-vidhan செயலியினை (NeVA) செயல்படுத்தச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் 28வது சட்டமன்றமாக டெல்லி சட்டமன்றமானது மாற உள்ளது.
- வாகன நிறுத்தம், பாதுகாப்பு மற்றும் தெருநாய் மேலாண்மை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் காரணமாக ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் விசாகப்பட்டின நகரத்தில் உள்ள ருஷிகொண்டா கடற்கரைக்கான நீலக் கொடிச் சான்றிதழைச் சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை (FEE) ரத்து செய்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி





- தமிழ் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் பொது அறிமுகப் புத்தகம் மற்றும் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் முதல் தொகுதியைத் தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டார்.
- இந்த முயற்சியானது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமானது, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்துடன் இணைந்து செயல்படச் செய்வதன் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுகிறது.
- இது தமிழ் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் சுமார் 12 தொகுதிகள் கொண்ட சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு முதல் பேராசிரியர் G. அரசேந்திரன் தலைமையிலான 20 நிபுணர்கள் கொண்ட குழுவினால் செயலாற்றப்பட்டு வரும் இந்தத் திட்டத்திற்காக மாநில அரசு 8 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.
- இந்தப் புத்தகத்தின் முதல் தொகுதியானது, இலத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மேற்கத்திய இந்தோ-ஐரோப்பிய மொழிகள் மற்றும் தமிழிலிருந்து தோன்றிய சமஸ்கிருதம், பாலி மற்றும் சிங்களம் போன்ற கிழக்கு இந்தோ-ஐரோப்பிய

மொழிகளில் சுமார் 19 சொற்களின் சொற்பிறப்பியல் கருதுகோளின் அடிப்படையில் தொகுக்கப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதிய உயர்வு

- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் (பின்னோக்கிய தேதியில்) அமலுக்கு வரும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும் அவர் ஓய்வூதியங்களை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.
- மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் ஊதியம் ஆனது, தற்போது 1 லட்சம் ரூபாயில் இருந்து 1.24 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- முன்னதாக 2,000 ரூபாயாக இருந்த தினப்படி ஆனது 2,500 ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது.
- மேலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் படும் ஓய்வூதியம் ஆனது, தற்போது 25,000 ரூபாயில் இருந்து 31,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- இதில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய நபர்களுக்கு, ஒவ்வோர் ஆண்டிற்கும் வழங்கப் படும் கூடுதல் ஓய்வூதியம் 2,000 ரூபாயில் இருந்து 2,500 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.
- அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் ஆண்டிற்கு 34 இலவச உள்நாட்டு விமானப் பயணங்களையும், தொழில்முறை மற்றும் தனிப்பட்டப் பயன்பாட்டிற்காக எந்த நேரத்திலும் வேண்டி முதல் வகுப்பு ரயில் பெட்டியில் பயணம் செய்யும் ஒரு வாய்ப்பினையும் பெறுகின்றனர்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆண்டுதோறும் 50,000 அலகுகள் மின்சாரத்தினையும் மற்றும் 4,000 கிலோ லிட்டர் தண்ணீரையும் இலவசமாகப் பெறுகின்றனர்.





| Category | Now | Earlier |
|---|---|---|
| Salary | ₹1.24 lakh | ₹1 lakh |
| Constituency Allowance | ₹87,000 | ₹70,000 |
| Office Expenses | ₹70,000 | ₹60,000 |
| Daily Allowance | ₹2,500 | ₹2,000 |
| MPs' Assured Monthly Income | ₹2.81 lakh | ₹2.3 lakh |
| Ministers' Assured Monthly Income | ₹2.86 lakh | ₹2.3 lakh |

## சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்

- மத்திய அமைச்சரவையானது, சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் (FTSCs) திட்டத்தினை 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் நீட்டித்துள்ளது.
- மத்திய அரசின் நிதியுதவி பெறும் இத்திட்டம் (CSS) ஆனது 2019 ஆம் ஆண்டு அக்டோபர்

02 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.

- பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் குறிப்பாக பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO) சட்டம் மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளில் விரைவான நீதி வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது 96.28% என்ற சிறப்பான தீர்வு காணல் விகிதத்தைக் கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும், இந்தத் திட்டத்தின் கீழ் 88,902 புதிய வழக்குகள் தொடரப் பட்டன என்பதோடு மேலும் 85,595 வழக்குகள் இதன் மூலம் தீர்க்கப்பட்டன.




## MSME நிறுவனங்களின் அளவுருக்களில் திருத்தங்கள்

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களை (MSME) வகைப்படுத்தச் செய்வதற்கான வருவாய் மற்றும் முதலீட்டு அளவுருக்களில் சில குறிப்பிடத்தக்கத் திருத்தங்களை மேற்கொள்ள உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது என்பதோடு இது ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- முன்னதாக 1 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட வரம்பிலிருந்து உயர்த்தப்பட்டு, 2.5 கோடி ரூபாய் அளவு வரையிலான முதலீடுகளைக் கொண்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தற்போது குறு நிறுவனங்களாக வகைப்படுத்தப்படும்.
- அத்தகைய நிறுவனங்களுக்கான வருவாய் வரம்பு ஆனது 5 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- முன்னதாக நிர்ணயிக்கப்பட்டிருந்த 10 கோடி ரூபாய் என்ற ஒரு வரம்பிலிருந்து இது அதிகரிக்கப் பட்டு, 25 கோடி ரூபாய் வரை முதலீடுகளைக் கொண்ட அலகுகள் ஆனது சிறு நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட உள்ளன.
- அத்தகைய நிறுவனங்களுக்கான வருவாய் வரம்பு ஆனது 50 கோடி ரூபாயிலிருந்து 100

கோடி ரூபாயாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

- முன்னதாக நிர்ணயிக்கப்பட்டிருந்த 50 கோடி ரூபாய் என்ற வரம்பிலிருந்து உயர்த்தப் பட்டு, 125 கோடி ரூபாய் வரை முதலீடுகளைக் கொண்ட MSME நிறுவனங்கள் தற்போது நடுத்தர நிறுவனங்களாக வகைப்படுத்தப்படும்.
- நடுத்தர நிறுவனங்களுக்கான வருவாய் வரம்பு 500 கோடி ரூபாயாக இரட்டிப்பாக்கப் பட்டுள்ளது.

**New classification of MSME**

| Type | INVESTMENT | | TURNOVER | |
|---|---|---|---|---|
| | Current | Revised | Current | Revised |
| MicroEnterprise | Rs 1cr | Rs 2.5cr | Rs 5cr | Rs 10cr |
| Small Enterprise | Rs 10cr | Rs 25cr | Rs 50cr | Rs 100cr |
| Medium Enterprise | Rs 50cr | Rs 125cr | Rs 250cr | Rs 500cr |

## ஊட்டச்சத்து மானியத் திட்டங்களுக்கு நிதியளித்தல்

**ALL-INDIA CONSUMPTION OF FERTILISER PRODUCTS**



| | Urea | DAP | MOP* | NPKS | SSP |
|---|---|---|---|---|---|
| 2018-19 | 314.18 | 92.11 | 29.57 | 90.28 | 35.79 |
| 2019-20 | 336.95 | 101.00 | 27.87 | 98.57 | 44.03 |
| 2020-21 | 350.43 | 119.11 | 34.25 | 118.11 | 44.89 |
| 2021-22 | 341.80 | 92.72 | 24.56 | 114.79 | 56.81 |
| 2022-23 | 357.25 | 104.18 | 16.32 | 100.74 | 50.17 |
| 2023-24 | 357.80 | 108.12 | 16.45 | 110.73 | 45.44 |

*In lakh tonnes. *For direct application, excluding supply to complex fertiliser units. Source: Fertiliser Association of India.*


- நாட்டில் விவசாயிகளுக்கான மானியத் திட்டங்கள் எதிர்மறையானத் தாக்கங்களை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக வேண்டி திருத்தப்பட்ட மதிப்பீட்டுக் கட்டத்தில் இந்தத் துறைக்கான கூடுதல் நிதியை கோருமாறு இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கான பாராளுமன்ற நிலைக்குழு அமைச்சகத்தினை வலியுறுத்தியுள்ளது.
- உற்பத்தி அலகுகளை சரியான நேரத்தில் நிறுவுவதை உறுதி செய்வதன் மூலம் நுண் யூரியா மற்றும் நுண் டை அம்மோனியம் பாஸ்பேட் (DAP) மீதான உற்பத்தித் திறனை விரிவுபடுத்தவும் அக்குழு மத்திய அரசிற்குப் பரிந்துரைத்துள்ளது.
- கூடுதலாக, இந்த நுண் உரங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக ஓர் உத்தியையும் முன் வைத்துள்ளது/கோரியுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் பல்வேறு பிரிவுகளில், நிதியானது குறைவாகப் பயன்படுத்தப் பட்டதையும் இக்குழு எடுத்துரைத்துள்ளது.
- இதில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் (PK) வகை உரங்கள் பிரிவின் கீழ் 20%, இறக்குமதி செய்யப்பட்ட PK உரங்கள் பிரிவின் கீழ் 12%,

உள்நாட்டு யூரியா உரங்கள் பிரிவின் கீழ் 14.76% மற்றும் சந்தை மேம்பாட்டு உதவியின் (MDA) கீழ் 59.57% ஆகியவை அடங்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## CHNV நன்னம்பிக்கை உறுதித் திட்டங்கள் – அமெரிக்கா

- சில குறிப்பிட்ட நாடுகளின் "சட்டப்பூர்வப் பாதைகளை" பயன்படுத்தி அமெரிக்க நாட்டிற்குள் புலம்பெயர்ந்தவர்களை அனுமதிக்கச் செய்யும் பிடன் ஆட்சி காலத்தின் திட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இது கியூபா, ஹைத்தி, நிகரகுவா மற்றும் வெனிசுலாவிலிருந்து அமெரிக்காவிற்கு வந்த 532,000 புலம்பெயர்ந்தோரின் தற்காலிக சட்டப் பூர்வ அந்தஸ்தினை ரத்து செய்ய உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பணி அனுமதிகள் மற்றும் நாடு கடத்தலில் இருந்து பாதுகாப்பு உள்ளிட்ட அதன் நன்னம்பிக்கை உறுதிக் காலம் ஆனது ஏப்ரல் 24 ஆம் தேதியன்று காலாவதியாக உள்ளது.
- குடிவரவு மற்றும் தேசியச் சட்டத்தின் கீழான நன்னம்பிக்கை உறுதி ஆனது, DHS மேற் பார்வையின் கீழ் ஒரு நபருக்கு அமெரிக்காவில் நுழைந்து அங்கு தற்காலிகமாக என தங்குவதற்கான அனுமதியை அதிகாரப் பூர்வமாக வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டில், அதிபர் ஜோ பிடன் வெனிசுலா மக்களுக்கான நன்னம்பிக்கை உறுதி நுழைவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தினார் என்பதோடு அதனை 2023 ஆம் ஆண்டில் கியூபா, ஹைத்தி மற்றும் நிகரகுவா போன்ற நாடுகளுக்கு அவர் அதனை விரிவுபடுத்தினார்.
- இந்த நான்கு நாடுகளுடன் அமெரிக்கா எவ்வித அரசு முறை உறவுகளையும் கொண்டு இருக்கவில்லை.





# பொருளாதாரச் செய்திகள்

## IBC தொடர்பான 4 அம்ச செயல் திட்டம்

- நிதித்துறைக்கான நிலைக்குழுவானது, மத்திய இயங்கலை தளம் மூலமான ஒரு தீர்வு

காணல் திட்டங்களுக்கான நேரடிச் சமர்ப்பிப்பு முறையைச் செயல்படுத்துமாறு பெரு நிறுவன விவகார அமைச்சகத்திற்கு (MCA) உத்தரவிட்டுள்ளது.

- இந்த நடவடிக்கையானது சமர்ப்பிப்பு செயல்பாட்டில் இரகசியத் தன்மையை உறுதி செய்வதையும், சில தரப்பினருக்கு மட்டும் செல்லும் சில தேவையற்றப் பலன்களைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 4 அம்சங்கள்:
  - தீர்வு காணல் திட்டங்களுக்கான நேரடிச் சமர்ப்பிப்பு முறையைச் செயல்படுத்தச் செய்தல்:
  - தீர்வு வழங்கீட்டு நிபுணர்களின் பங்கு மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்;
  - வழக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு காலக்கெடுவை மிகவும் வெளிப்படையாகக் கண்காணித்தல் மற்றும்
  - கடன் வழங்குநர்கள் குழுவின் (CoC) கட்டமைப்பை மதிப்பாய்வு செய்தல்.
- நொடிப்பு நிலை மற்றும் திவால்நிலைக் குறியீடு (IBC) திவால்நிலைத் தீர்வுக்கான காலக்கெடு மற்றும் கடன் வழங்குநர் சார்ந்த செயல்முறையை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நொடிப்பு நிலை என்பது தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் நிலுவையில் உள்ள தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையைக் குறிக்கிறது.
- திவால்நிலை என்பது திவாலான, அதாவது தனது கடனை அடைக்க முடியாத ஒரு நபர் அல்லது நிறுவனத்திற்கு, தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட சட்டப் பூர்வ அந்தஸ்து நிலையைக் குறிக்கிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆப்பிரிக்கப் பெண்குயின் வளங்காப்பு

- ஆப்பிரிக்கப் பெண்குயின்களை அழிவிலிருந்து காப்பாற்றச் செய்யும் ஒரு முயற்சியில்,

தென்னாப்பிரிக்க நாட்டின் அரசானது, ஆறு முக்கிய இனப்பெருக்கத் தளங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நிறுவியுள்ளது.

- இனப்பெருக்கப் பகுதிகளைச் சுற்றியுள்ள வணிக ரீதியான மீன் பிடித்தலுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 10 ஆண்டு காலத் தடை விதித்துள்ளது.
- ஆப்பிரிக்கப் பென்குயின்கள் ஆனது பேரரசப் பெங்குயின்களை விட மிகச் சிறியவை என்பதோடு மேலும் இவை தென்னாப்பிரிக்காவில் மட்டுமே மிகப் பிரத்தியேகமாகக் காணப் படுகின்றன.
- தற்போதைய சரிவு விகிதத்தில், மிகவும் தனித்துவமான இந்தப் பறவைகள் 2035 ஆம் ஆண்டிற்குள் அதன் இயற்கை வாழிடங்களில் அழிந்து விடக் கூடும்.




## மாநிலச் செய்திகள்

### முதல் அறிவியல் பூர்வ நிலக்கரி சுரங்கத் தொகுதி




- மலைப் பாங்கான கிழக்கு ஜெயின்சியா என்ற மாவட்டத்தின் பைண்டிஹாட்டி என்ற பகுதியில் உள்ள சரிங்க்காம்-A எநனுமிடத்தில் முதல் 'அறிவியல் பூர்வ' நிலக்கரிச்

சுரங்கத் தொகுதியை மேகாலயா அரசு திறந்து வைத்துள்ளது.

- வாக்கியான் மற்றும் ராஷியாங் ஆறுகள் இந்தப் பகுதி வழியாகப் பாய்கின்றன.
- வைலாங் ஆற்றின் துணை நதியான வாக்கியான், இந்நிலக்கரித் தொகுதியின் தெற்கு எல்லையில் பாய்கிறது.
- உச்ச நீதிமன்றம் மற்றும் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் ஆகிய இரண்டும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அபாயகரமான எலித் துளை நிலக்கரிச் சுரங்க முறையினை தடை செய்தன.
- NGT நியமித்தக் குழுவின் ஒரு கண்டுபிடிப்பு ஆனது, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த மாநிலத்தில் சுமார் 24,000 சட்ட விரோத எலித்துளை நிலக்கரிச் சுரங்கங்கள் இன்னும் செயல்பட்டு வருவதைக் காட்டுகிறது.

# முக்கிய தினங்கள்

## உலகப் பொம்மலாட்ட தினம் - மார்ச் 21

- பண்டைய கிரேக்கத்தில் சுமார் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பொம்மலாட்டம் நடைமுறையில் உள்ளது.
- இது ஈரானியப் பொம்மலாட்ட நாடகக் கலைஞர் ஜவாத் சோல்ஃபாகாரி என்பவரால் கருத்துருவாக்கப்பட்டது.
- சர்வதேசப் பொம்மலாட்டச் சங்கம் ஆனது 1929 ஆம் ஆண்டில் பிராகா எனுமிடத்தில் நிறுவப்பட்டது.
- இந்தியாவில் பொம்மலாட்டம் சரம், நிழல், தடி மற்றும் கையுறை பொம்மலாட்டம் என நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் பொம்மலாட்டம் ஆனது அனைத்து வகை பாரம்பரிய இந்திய நாட்டின் பொம்மலாட்டங்களிலும் மிகப்பெரியது, கனமானது மற்றும் தெளிவான உச்சரிப்பு உடையது.
- இந்த வகைப் பொம்மலாட்டம் ஆனது தடி மற்றும் சரம் பொம்மைகளின் நுட்பங்களை ஒருங்கிணைத்த கலையாகும்.
- 2025 ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Robots, AI and the dream of the puppet?” என்பதாகும்.





## 113வது பீகார் மாநில தினம் - மார்ச் 22

- 1912 ஆம் ஆண்டு இந்த நாளில் தான் ஆங்கிலேயர்கள் வங்காளத்திலிருந்து தனியாகப் பிரித்து 'பீகார்' என்ற புதிய மாகாணத்தை உருவாக்கினர்.
- வங்காள மாகாணம் ஆனது வங்காளம், ஒரிசா, பீகார் மற்றும் அசாம் ஆகிய நான்கு

சுபாக்களாகப் பிரிக்கப்பட்டது.

- பாட்னா உயர் நீதிமன்றம் ஆனது 1916 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதி முதல் அங்கு செயல்படத் தொடங்கியது.
- பல்வேறு காரணங்களுக்காக அந்த மாநிலம் எட்டு முறை என்று குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Advanced Bihar, Developed Bihar' என்பது ஆகும்.




## புவி நேரம் 2025 - மார்ச் 22




- இது 2007 ஆம் ஆண்டில் உலகளாவிய நிதியத்தினால் (WWF) தொடங்கப்பட்டது.
- சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் குறித்த ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- இந்திய நேரப்படி இரவு 8:30 முதல் இரவு 9:30 மணி வரையிலான ஒரு மணி நேரத்திற்குத்

தேவையற்ற விளக்குகளை அணைக்க மக்களை ஊக்குவிக்கிறது.

- இந்த ஆண்டிற்கான புவி நேரத்திற்கான கருத்துரு, "The Power of Nature" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அதிக வளர்ச்சியடைந்த நிறுவனங்கள் 2025

- இந்திய நேரடிக் கடன் வழங்கும் தளமான லென்ட்பாக்ஸ் நிறுவனம் பைனான்சியல் டைம்ஸ் மற்றும் ஸ்டாடிஸ்டா ஆகியவற்றின் 500 மிக அதிக வளர்ச்சியடைந்த ஆசிய-பசிபிக் நிறுவனங்களின் தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ப்ளூஸ்மார்ட் (6வது), மீஷோ (72வது), டைட்டன் நிறுவனம் (301வது), ஆதித்யா பிர்லா கேபிடல் (374வது), மற்றும் ஹேவெல்ஸ் (396வது) போன்ற பிற குறிப்பிடத்தக்க இந்திய நிறுவனங்களும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- மொத்தத்தில், இந்தியாவைச் சேர்ந்த 81 நிறுவனங்கள் இப்பட்டியலில் இடம் பெற்று உள்ளன.
- இந்த ஆண்டு தர வரிசையில் 108 நிறுவனங்கள் இதில் இடம் பெற்றுள்ளதுடன், அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் இடம் பெற்றுள்ள நகரம் மற்றும் நாடு சிங்கப்பூர் ஆகும்.

High-Growth Companies Asia-Pacific 2025

| Rank | Name | Country | Category | Absolute growth rate (%) | Compound annual growth rate (%) | Revenue 2023 ($mn) | Revenue 2020 ($mn) | Number of employees (2023) | Founding Year |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Lendbox | India | Fintech, Financial Services & Insurance | 25,703.14 | 536.64 | 51.13 | 0.22 | 108 | 2015 |
| 2 | Borong | Malaysia | Ecommerce | 18,086.26 | 466.56 | 51.33 | 0.31 | 69 | 2017 |
| 3 | Etaily | Philippines | Ecommerce | 13,086.45 | 408.99 | 29.03 | 0.22 | 121 | 2019 |
| 4 | Library Company | South Korea | Leisure & Entertainment | 12,681.74 | 403.73 | 18.35 | 0.16 | 24 | 2017 |
| 5 | Habitfactory | South Korea | Fintech, Financial Services & Insurance | 7,655.22 | 326.45 | 9.94 | 0.14 | 58 | 2016 |
| 6 | BluSmart | India | Logistics & Transportation | 6,921.43 | 312.55 | 39.32 | 0.56 | 643 | 2018 |
| 7 | BigHaat | India | Agriculture, Forestry & Fishing | 6,237.80 | 298.70 | 128.00 | 2.25 | 239 | 2015 |
| 8 | Zypp Electric | India | Logistics & Transportation | 5,859.16 | 290.60 | 36.64 | 0.69 | 1,200 | 2017 |
| 9 | Kuku FM | India | Leisure & Entertainment | 5,320.48 | 278.45 | 12.61 | 0.26 | 237 | 2018 |
| 10 | MyVenue | Australia | IT & Software | 5,114.64 | 273.60 | 9.18 | 0.18 | 40 | 2017 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★